**கலேவெல பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 16 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 08 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர முக்கியத்துவம் நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கலேவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மைகள்

------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை பொதுத்துறை கணக்கீடு நியமங்களுக்கு இணங்க கலேவெல பிரதேச சபையினால் மீளாய்வண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் தயாரித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ஏல விற்பனவில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 1,615,000 பெறுமதியான பொறியும் பொறித் தொகுதிகளினது கிரயத்தினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இறைச்சிக் கடை வாடகையால் கிடைத்திருந்த ரூபா 80,216 இற்கான 04 காசோலைகள் மதிப்பளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை மீதிக்கு அப் பெறுமதி அடங்கியிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துக் கணக்குகளில் கூட்டுத்தொகையுடன் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு மீதி சமப்பட வேண்டும். எனினும், அவவிரண்டு மீதிகளிடையே ரூபா 2,306,909 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஒரு வங்கி நடைமுறை கணக்கின் மீதி ரூபா 100,000 குறைவாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூபா 2,054,440 மீதியினை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.3 இணைக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப்பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 25,245,860 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,118,879 ஆக காணப்பட்டதுடன் 5 வருட காலத்தை கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 782,897 இற்கான மீதியும் இதில் அடங்கியுள்ளது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,947,579 ஆக காணப்பட்டதுடன் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 19,842,787 இற்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியும் இதில் அடங்குகின்றது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 238,526,877 இற்கான மீதியொன்று கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைகள்

-------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றுநிருப ஏற்பாடுகளின் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) பிரிவு 126 | துணை விதிகள் தயாரிக்கப்படாமல் 04 விடயங்களின் கீழ் ரூபா 285,004 இற்கான வருமானமொன்றினை உழைத்துள்ளது. |
| (ii) பிரிவு 19 (i) | குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கமின்றி ஊழியர்கள் 26 பேர் கடமையில் ஈடுபடுத்தி ரூபா 3,354,192 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டுள்ளன. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணச் கோவையின் பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 08 வாகனங்கள் தொடர்பாக ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு என்பன கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. அத்துடன், அவ்வாகனங்களுக்காக ரூபா 1,499,759 இற்காக எரிபொருள் செலவு மேற் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) 1990 அக்டோபர் 10 திகதிய இலக்க 41/90 பொது நிருவாகச் சுற்று நிருபம் | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 13 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருபம் | |
| (i) 2013 மார்ச் 23 திகதிய இலக்கம 3/2/2/4 கொண்ட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம் | குறிப்பிட்ட வரையறைகளை மிகைத்து ரூபா 14,824 இற்கான தொலைபேசிப் படி உப தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 2013 ஏப்ரல் 05 திகதிய 01/2013 சுற்று நிருபம் | |
| • பந்தி 01 மற்றும் 03 | தலைவருக்கு மீளாய்வாண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்காக ரூபா 12,500 இற்கான எரிபொருள் படியும் 2013 ஏப்ரல் 26 திகதி வரை வழங்கியிருந்த பொதுக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஏப்ரல் மாதத்திற்காக சபை மந்திரிமார் 15 பேருக்கு ரூபா 37,500 இற்கான எரிபொருள் படியும் சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது. |
| • பந்தி 04 | குறிப்பிட்ட பிரயாணங்களை உறுதிப்படுத்துவதற்காக நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்பிக்கப்படாத 13 மந்திரிமாருக்கு ரூபா 197,500 இற்கான எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,562,387 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,412,057 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 849,670 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு வருமானத்திற்கு மிகை நூற்றிற்கு 9.15 பெறுமதி ஒன்றினை பெற்றிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போது அப் பெறுமதி நூற்றிற்கு 11.49 என காட்டப்பட்டமையால் 2.34 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டுகின்றது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------

2.3.1 வீதவரி மற்றும் ஏக்கர்வரி

-------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த வீதவரி மற்றும் ஏக்கர் வரி மீதிகள் முறையே ரூபா 945,495 மற்றும் ரூபா 64,350 ஆக காணப்பட்டதுடன், அம் மீதிகளுக்கு 01 வருட காலத்தை மிகைத்த முறையே ரூபா 287,104 மற்றும் ரூபா 50,668 இந்கான மீதிகளும் அடங்கியிருந்தன.

2.3.2 கழியாட்ட வரி

---------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கழியாட்டவரி மீதி ருபா 6,948 ஆக காணப்பட்டதுடன், 10 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன் கொண்டு வரப்பபட்டுள்ளது.

2.3.3 வாடகை

------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 146,811 ஆக காணப்பட்டதுடன் அம் மீதிக்கு 2004 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 84,581 இற்கான இறைச்சிக் கடை வாடகை மீதியொன்றும் அடங்கியுள்ளது.

2.3.4 அனுமதிப்பத்திர கட்டணம்

--------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண கணக்கின் மீதி ரூபா 691,370 ஆக காணப்பட்டதுடன் அம்மீதி 06 வருட காலத்தை மிகைத்து காணப்பட்டது.

2.3.5 நீர்க் கட்டணம்

---------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டணம் மீதி ரூபா 407,239 ஆக காணப்பட்டதுடன், அம் மீதி 01 வருடகாலத்தை மிகைத்துக் காணப்பட்டது.

2.3.6 நீதி மன்றத் தண்டப்பணமும் முத்திரை கட்டணமும்

--------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணமாக ரூபா 3,213,250 இற்கான

தொகை ஒன்று மற்றும் முத்திரை கட்டணம் ஆக ரூபா 10,108,464 தொகை ஒன்றும் அறவிடப்படவேண்டியிருந்தது.

2.4 மிகைவிதிப்பு

-----------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டொன்றின் போது விதிக்கப்பட்ட மிகைவிதிப்புக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 226,000 தொகையொன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வு பெற்று சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 07 அலுவலர்களிடம் 1979 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 26,334 இற்கான நிலுவை கடன் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகளின் போது கிடைத்திருந்த 197 கட்டட விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 34 விண்ணப்பங்களுக்காக மத்திரமே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 776 வர்த்தக நிலையங்களை இனங்கண்டிருந்த போதும் அவற்றில் 103 வர்த்தக நிலையங்களுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அனுமதிப்பத்திரம் இன்றி 673 வர்த்தக நிலையங்ள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

(ஈ) நீர் செயற்திட்ட ஒன்றிற்காக வங்கி நடைமுறை கணக்கு ரூபா 108,749 இற்கான மீதி ஒன்றுடன் 2011 ஆண்டு முதல் செயற்படாது காணப்பட்டது.

(உ)(i) 2013 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த கடந்த 03 வருடங்களில் கிடைத்திருந்த ரூபா 92,817 இற்கான மதிப்பளிக்கப்படாத 04 காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 189 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அவற்றில் ரூபா 66,299 பெறுமதியான மதிக்களிக்கப்படாத காசோலை தொடர்பான பணத்தை பொறுப்பு வாய்ந்த அலுவலரிடம் அறவீடு செய்வதற்காக 2010 ஜுன் 24 திகதிய பொதுக் கூட்டத்தில் தீர்மாணிக்கப்பட்டிருந்தது எனினும் அதற்கு இணங்க அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிவரை கிடைக்க வேண்டிய முற்கொடுப்பனவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,391,897 ஆக காணப்பட்டதுடன் பிரதேச சபை ஆரம்பித்த காலம் முதல் முன் கொண்டுவரப்படும் ரூபா 3,381,897 இற்கான மீதிகளும் அடங்கியிருந்ததுடன் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் காணப்படும் 24 பொருட் பதிவேட்டுப் பொருட்களின் பற்றாக் குறை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்டணத்தை அறவீடு செய்யாமல் டீ.பீ. தென்னகோன் ஞாபகார்த்த நடனசாலையினை 18 சந்தர்ப்பங்களில் வாடகைக்கு கொடுத்ததன் மூலம் ரூபா 19,500 வருமானமொன்றினை இழந்துள்ளது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

---

மதிப்பீட்டு பெறுமதி ரூபா 82,600 இற்கான பொருட் பதிவேட்டு பண்டங்கள் 10 விடயங்கள் ஒரு வருடத்தை விட கூடிய காலம் முதல், ரூபா 579,000 பெறுமதியான 2 டிரக்டர்கள் 04 வருடங்களை விடக் கூடிய காலம் முதல் பயன்படுத்தப்படாமல் மற்றும் குறைபாட்டுடனும் காணப்பட்டது.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | நிர்மாண வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை மற்றும் ஏற்பாடு மூலம் | இடப் பரிசோதனை மேற்கொண்ட திகதி | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பஹலவெவ பல்லமயாய பாதை சரளை கற்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் வேலை | ரூபா. 329,487<br>பொது நிதி | 2013.12.03 | i. | ஆரம்பம் முதல் சுமார் 200 மீற்றர் தூரம் வரை கிடங்குகள் ஏற்பட்டு பாதை மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட நியமங்களில் சரளை கற்கள் போடப்படாமையால் கரைந்து சென்றுள்ள பாதையில் மேற் பக்கத்தில் 9 அலகுகள் பாரிய கற்கள் வெளியே தெரியக் கூடியதாக காணப்பட்டது. |
| (ஆ) | புலன்வெல பள்ளியின் முன்பக்க பாதையில் அரைச் சுவர் நிர்மாணித்தல் | ரூபா 150,000 பொது நிதி | 2014.12.03 | | அரைச் சுவரின் மேற்பகுதியில் ½ அங்குல கனத்தில் போடப்பட வேண்டிய சாந்து தட்டு ¼ அங்குலத்தில் போடப்பட்டுள்ளமையால் 05 இடங்களில் சீமெந்து தட்டு வெடிப்படைந்து காணப்பட்டது. அத்துடன் அந்த 11.67 சதுர மீற்றர்களுக்காக ரூபா 7,970 தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | மீவலபதஹ பாதை சீமெந்து அச்சுக் கற்கள் பதிக்கும் நிர்மாண வேலை கட்டம் i மற்றும் ii | ரூபா 1,000,000 மகநெகும | 2014.11.18 | i. | கொங்கிரீட் அச்சுக் கற்கள் பதிப்பதற்கு முன்னைய பாதையின் போது பாதுகாப்பு சுவருக்காக குறிப்பிடப்பட்டுள்ளவாறு கலவையில் கொங்கிரீட் போடப்பட்டிருக்கவில்லை. பல இடங்களை உடைத்து பரிசோதித்த போது காணக்கூடியதாக இருந்தது. |
| | | | | ii. | உரிய நியமங்களுடனான கொங்கிரீட் அச்சுக் கற்கள் பாதையில் பரப்பி இருக்கவில்லை. |

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

----------------------------------------------------------------------

4.1 அகக் கணக்காய்வு

--------------------------

1988 (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 5(7) மற்றும் நிதிப் பிரமாணங்கள் 134 இன் பிரகாரம் அகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கணக்காய்வு மற்றும் முகாமைக் துவக்குழு அமைத்திருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------

(i) 05 வருமான விடயங்களில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,605,000 இல் எதுவித பணத்தினை உழைத்திருக்கவில்லை. அத்துடன் மேலும் 21 வருமான விடங்களில் மதிப்பீடு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையே முரண்கள் நூற்றிற்கு 11 இல் இருந்து நூற்றிற்கு 94 வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டது,

(ii) 13 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்படல் நூற்றிற்கு 05 முதல் 95 வரையான வீச்சில் காணப்பட்டதுடன் ஒரு செலவு விடயத்தில் மொத்த மதிப்பீடு ஏற்பாடுகளும் மாற்றப்பட்ட பின்னர் குறைநிரப்பி மூலம் மீண்டும் வழங்கப்பட ஏற்பாடுகளில் இருந்தும் நூற்றிற்கு 93 சேமிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பாதீடு பயன்தறு முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) பாதீட்டு கட்டுப்பாடு

(உ) வருமான நிருவாகம்

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(எ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு